செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

நற்றமிழ் அறிவோம்

பள்ளி மாணவர்களுக்கான
தூய தமிழகராதி
(1 முதல் 5ஆம் வகுப்பு வரை)

©
தமிழ்நாடு அரசு
2017

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்
திட்ட இயக்ககம்

நற்றமிழ் அறிவோம்

பள்ளி மாணவர்களுக்கான

தூய தமிழகராதி

(1 முதல் 5 ஆம் வகுப்பு வரை)

முதன்மைப் பதிப்பாசிரியர்

இரா. வெங்கடேசன், இ.ஆ.ப.,

அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

பதிப்பாசிரியர்

முனைவர் **கோ. செழியன்**

இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்ககம்

©

தமிழ்நாடு அரசு

2017

நூல் விவரம்

நூலின் பெயர்	:	நற்றமிழ் அறிவோம்
முதன்மைப் பதிப்பாசிரியர்	:	இரா.வெங்கடேசன், இ.ஆ.ப.,
பதிப்பாசிரியர்	:	முனைவர் கோ. செழியன்
பதிப்பு	:	முதலாம் பதிப்பு
பக்கம்	:	80
மொழி	:	தமிழ்
தாளின் தன்மை	:	80 ஜிஎஸ்எம் மேப்லித்தோ
நூலின் அளவு	:	1/8
வெளியீடு	:	செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் சென்னை – 600 113.
அச்சிட்டோர்	:	அரசு மைய அச்சகம் சென்னை–600 079.

விலையில்லா நூல்

நூல் தொகுப்புக் குழு

முனைவர் கோ. விசயராகவன்
இயக்குநர் (பொறுப்பு), தமிழ்வளர்ச்சித்துறை (ம)
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

முனைவர் ந. அருள்
இயக்குநர், மொழிபெயர்ப்புத்துறை.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

பதிப்பாசிரியர்கள்

முனைவர் மா. பூங்குன்றன்
திரு. சு. வீரவேலு
முனைவர் மு. கண்ணன்
முனைவர் தி. பாலசுப்பிரமணியன்
திரு. கி. தமிழ்மணி
முனைவர் மு. கோமதிவள்ளியம்மை

தொகுப்பாளர்கள்

முனைவர் வே. கார்த்திக்
திரு. கி. இராமர்
திருமதி ஜெ. சாந்தி
திரு. வே. பிரபு
செல்வி கு. சங்கீதா

திரு. ஏ. காந்தி
உதவிப் பதிப்பாசிரியர்

திருமதி க. கஸ்தூரி
தமிழ்த் தட்டச்சர்

திரு. ச.கி. கணேசன்
சிறப்பு நிலை ஓவியர்

திரு. ப. தீபக்
கணிப்பொறியாளர்

சேவூர் சோ. இராமச்சந்திரன்
இந்துசமயம் (ம) அறநிலையத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

வாழ்த்துரை

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்"

என்றார் பாரதி. அவரின் சிந்தனைக்குச் செயல்வடிவம் கொடுத்தவர் மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள். தமிழ்மொழியின் மேன்மைக்கு வகுத்தளித்த வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் சிறப்பாகச் செயல்படுத்தப்படுவதுதான் அம்மாவின் பொற்கால ஆட்சியின் சாதனை.

அச்சாதனை மகுடத்தில் பதிக்கப்பெறும் மற்றொரு மணிக்கல்லாக வெளிவந்திருக்கிறது **'நற்றமிழ் அறிவோம்'** என்னும் 'தூயதமிழகராதி'. ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்குத் தூய தமிழ்ச்சொற்களை அறிமுகப்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள இவ்வகராதி இன்றைய சூழலில் பள்ளிப்பிள்ளைகளுக்குப் பழகுதமிழ்ச் சொற்களை அழகுற படங்களுடன் அமைத்துத் தந்திருக்கிறது.

மழலைகளின் மனத்தில் தாய்மொழிப் பற்றை விதைத்துவிட்டால் வருங்காலத்தில் தமிழின் பெருமையும் வளமும் அவர்களின் உள்ளத்தில் செழித்தோங்கும். மாணவர்கள் உள்வாங்கிக் கொள்வதற்குச் சுமையாக இல்லாமல், சுவையாக இருக்கும்வகையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள எளிய தமிழ்ச்சொற்களும், அவற்றிற்கு எளிதில் பொருள் விளங்கிக் கொள்வதற்கு உதவியாக ஏற்ற வண்ணப்படங்களும் பொருத்தமுற அமைந்திருப்பது பாராட்டிற்குரியது.

"தமிழுயர்ந்தால் தமிழ்நாடு தானுயரும்
அறிவுயரும் அறமும் ஓங்கும்"

என்ற பாவேந்தர் பாரதிதாசனாரின் வாய்மொழிக்கிணங்க தமிழின் உயர்வுக்கு நல்லதொரு ஏணிப்படியாக அமையவிருக்கும் 'நற்றமிழ் அறிவோம்' என்னும் 'தூயதமிழகராதி' செம்மையாக வெளிவருவதற்குக் காரணமாக விளங்கிய தமிழ்வளர்ச்சி (ம) செய்தித்துறை அரசு செயலாளர், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு) மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த வாழ்த்துகள்.

சோ. இராமச்சந்திரன்

(சேவூர் சோ. இராமச்சந்திரன்)

இரா.வெங்கடேசன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

அணிந்துரை

> "சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே! – அதைத்
> தொழுது படித்திடடி பாப்பா!"

என்றார் பாரதி. அத்தகைய உயர்தமிழ்ச் சொற்களை, தூய தமிழ்ச் சொற்களை மாணவர்களின் மனத்தில் விதைத்திடும் நோக்கில் வெளிவந்திருக்கிறது **'நற்றமிழ் அறிவோம்'** என்னும் 'தூயதமிழகராதி'.

தாய்மொழியை மறைத்துவிட்டு... மறந்துவிட்டு... பிறமொழியில் பேசுவதும் எழுதுவதும் பெருமை என்ற எண்ணம் இக்காலத்தில் விரவி விளைந்திருக்கிறது. இந்த நச்சு எண்ணத்தைக் களையெடுத்து, மாணவர்களின் மனத்தில் தாய்மொழிப் பற்று என்ற நல்லவிதையை விதைத்து வளர்க்கும் அரும்பணியைத் தொடங்கிவைத்திருக்கிறது இந்த 'நற்றமிழ் அறிவோம்' என்னும் 'தூயதமிழகராதி'.

> "ஏற்றமுறச் செய்வதுவும் மாற்றமுற வைப்பதுவும்
> ஏடே ஆகும்"

என்ற பாவேந்தர் பாரதிதாசனின் கருத்தை அடியொற்றி, மாணவர்களுக்கு அன்னைத் தமிழ்மொழியின் சொற்களை அறிமுகப்படுத்தியிருக்கிறது இவ்வகராதி.

எளிய சொற்கள், எண்ணம் கவரும் ஏற்ற வண்ணப்படங்கள் என அனைத்தும் ஒருங்கே அமையச் சிறப்பாய் வெளிவந்திருக்கிறது இந்த 'நற்றமிழ் அறிவோம்' என்னும் 'தூயதமிழகராதி'.

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான இளம்தலைமுறை மாணவர்கள் இனிய தமிழ்ச்சொற்களைப் படிப்பதோடு மட்டும் நில்லாமல் அவ்வழகு தமிழ்ச் சொற்களைத் தம் பேச்சிலும் நடைமுறையிலும் பயன்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டும்; அதற்கு அறிவுசார் ஆசிரியப் பெருமக்களும் அன்புசார் பெற்றோர்களும் தூண்டுகோலாய்த் துணைநிற்க வேண்டும்.

நற்றமிழ்ச் சொற்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் எதிர்காலத் தலைமுறையினரிடம் தாய்மொழிப் பற்றை விதைப்பதற்குக் காரணமாக அமைந்துள்ள 'நற்றமிழ் அறிவோம்' என்னும் 'தூயதமிழகராதி'யைச் சிறந்த முறையில் வெளிக்கொணர்ந்துள்ள செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு) மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த வாழ்த்துகளை உரித்தாக்குகிறேன்.

7/3/17

(இரா.வெங்கடேசன்)

முனைவர் **கோ. செழியன்**
இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்
சென்னை–113.

பதிப்புரை

"இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்" என்கிறது பிங்கல நிகண்டு.

உலக மொழிகள் அனைத்திற்கும் முற்பட்டதாகச் சொல்லப்படும் தமிழ்மொழி பானை ஓடு, செப்புப் பட்டயம், கல்வெட்டு, பனையோலை ஆகியவற்றில் பதிந்து வாழ்ந்து இன்றைய கணினி உலகிலும் காலூன்றி வாழும் மொழியாக வலம் வருகிறது.

இலக்கியம் நிறைந்து இணையத்திலும் இணைந்து வாழும் நம் இனிய தமிழ் மொழியைச் சிதைவின்றிக் காத்தால்தான் அம்மொழிக்குரிய இனம் தனக்குரிய தன்மானத்தோடு தலைநிமிர்ந்து வாழமுடியும்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்!"

என்று வியந்து மகிழ்ந்தார் பாரதி. அதைக் கருத்தில் கொண்டு மாணவர்களிடம் தாய்மொழிப் பற்றை ஊட்ட வேண்டிய இன்றியமையாமை உள்ளது. மருத்துவம், பொறியியல், வானவியல் என அனைத்தையும் தமிழால் வழங்கிட முடியும். அதனால்தான்,

"வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும்; வண்மொழி வாழியவே!"

என்றார் பாரதி. அந்த நம்பிக்கையை இளையதலைமுறையினரிடம் உருவாக்க வேண்டும். அதற்கான முதற்படியாகப் பள்ளி மாணவர்களுக்கு நற்றமிழ்ச் சொற்களை அறிமுகப்படுத்தும் நோக்கில் இந்த 'நற்றமிழ் அறிவோம்' என்னும் 'தூயதமிழகராதி' உருவாக்கப்பட்டுள்ளது.

"இளம்பிள்ளைகளே இலக்கு! – அவரிடம்
இனிய தமிழைப் பழக்கு!"

என்ற சிறந்த நோக்கில், பள்ளி பயிலும் 'பிள்ளைத் தமிழுக்கு' நல்ல தமிழைப் பழக்கப்படுத்தி, 'தனித்தமிழைத்' தனித்த புகழுடன் தழைத்தோங்கச் செய்வதற்கு வெளிவந்துள்ள 'நற்றமிழ் அறிவோம்' எனும் 'தூய தமிழகராதி'யில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு நற்றமிழ்ச் சொற்கள் வண்ணப் படங்களுடன் தரப்பட்டுள்ளன.

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் வழித்தடத்தில் இயங்கி வரும் இவ்வியக்ககத்தின் சார்பில் வெளியிடப்பெறும் இவ்வகராதியின் நோக்கம் வெற்றியடையவும், மாணவர்கள் நற்றமிழைக் கற்றறியவும் பெற்றோரும், ஆசிரியர்களும் பெருந்துணைபுரிய வேண்டும். பள்ளிப் பிள்ளைகளின் அறிவு வளர்ந்தோங்கப் பல்வேறு வகையில் பாடுபட்டுவரும் கல்வித்துறை இந்நூலை மாணவர்களிடம் அறிமுகப்படுத்தும் பெரும்பணிக்கும் எனது மனமார்ந்த நன்றி.

இந்நூல் வெளிவரத் துணைநின்ற மாண்புமிகு இந்துசமயம் (ம) அறநிலையத்துறை அமைச்சர், அரசு செயலாளர், தமிழ்வளர்ச்சித்துறை இயக்குநர், எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநர், மொழிபெயர்ப்புத்துறை இயக்குநர் அனைவர்க்கும் எனது நன்றி.

(கோ. செழியன்)



அரத்தி

அரைக்கால்சட்டை



அளவுகோல்

ஆடல்

உணவுமேசை

உலக்கை

ஊதாம்பி



ஏனம்

ஒளிப்படம்

கழுத்துப்பட்டை



கற்பலகை

கால்பந்து

காலுறை



குவளை



கூராக்கி



கைக்குட்டை

கையுறை

கொக்கி



சுவர்க்கடிகாரம்

சோளப்பொறி

தள்ளுவண்டி

தொடரி

பள்ளிப்பேருந்து



பற்பசை

பூங்கொத்து

பொத்தான்



மணிச்சட்டம்



மின்விசிறி

வளைவு



வாளி



அங்காடி

அரைவி

இரட்டையர்

இறகுப்பந்து



உணவுக்கூடம்

உலகவுருண்டை



கரிக்கோல்

கவ்வி

காலணி

காற்றாலை



கொண்டையூசி

சரக்குந்து

சிற்றுந்து

சுட்டி

சுழல் நாற்காலி



சொடுக்கி



திருகாணி



துடைப்பான்

தூக்கி



தூரிகை



தேய்ப்பி

தொலைபேசி

பழச்சாறு

பனிக்கூழ்



பிறைநிலா



புத்தகக்கடை

மெத்திருக்கை

வரைமெழுகு

வறளப்பம்



விசைப்பலகை

இடைவார்

உணவடம்



உயரம் தாண்டுதல்

ஒலிவாங்கி

ஒளிப்பட நிலையம்

கணையாழி

கூடைப்பந்து

கோதடை



சலவைப்பொறி

சாய்வுமிசை

சாளரம்



சுண்டாட்டம்



செருகி

சைகை

சோறடுகலன்



திருப்புளி

திரைச்சீலை

தூவல்



தோல் சீவி

நிலைப்பேழை



நுழைவாயில்



பற்றவைத்தல்

பொதியப்பம்



மருந்தகம்



மாச்சில்

மூடுந்து

வட்டை

வடவூர்தி



வேகத்தடை

வைத்தூற்றி

அலைவாங்கி

ஆடுகளம்



இழுப்பறை

எண்காலி

கணிப்பான்

கலையரங்கு

கவைச்சட்டை

குறுந்தகடு

கைப்பந்து

சீவரி

செந்தாழை

சேணியக்கி

தளருடை

திணியடை



திரிகை



திறன்பேசி

தொடுதிரை



தொலைநோக்கி



நடைமேடை



நாவாய்



நீர்ச்சறுக்கு



நீரோடை

மடை

மின்னாக்கி

முடிதிருத்தகம்



முளரி

மூடணி



வங்கி

வளமனை

விசிப்பலகை

இயங்குபடி

ஈருருளி

உலங்கூர்தி



உள்முற்றம்



எறிபந்து

ஏவுகணை

ஏறுதழுவல்

கடவுச்சீட்டு

காசாள்கருவி



காட்சிப்பேழை

குருதிவங்கி



குழிப்பந்து

கொட்டுந்து



கொள்கலம்



கோளரங்கம்



சீர்வளி

சேங்கிழங்கு

தகரி

தண்ணாடி

துளைப்பான்

தொடிக்கோல்

நுண்ணோக்கி

பதாகை

மதகு



மின்கலம்



மின்னூட்டி



முடுக்காணி



வட்டரங்கு



விரைவு உணவகம்

வெட்டுக்குறடு